*செய்தி வெளியீடு எண் :24* *நாள் :13.02.2020*

**தேனி மாவட்டம்**
**விவசாயிகள் ரூபே உழவர் கடன் அட்டை**
**பெறுவதற்கான சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**
******

தேனி மாவட்டத்தில் விவசாய பெருமக்கள் அனைவரும் பயன்படும் வகையில் **ரூபே உழவர் கடன் அட்டை** (RUPAY KISAN CREDIT CARD) பெறுவதற்கான சிறப்பு முகாம் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

உழவர் கடன் அட்டை மூலம் கடன் பெறும் விவசாயிகளுக்கு 7% வட்டி விகிதத்தில் பயிர் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இக்கடனை குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு மத்திய அரசால் 3% வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. உழவர் கடன் அட்டை மூலம் ரூ.1.60 இலட்சம் வரை கடன் பெறலாம். ரூ.1.60 இலட்சத்திற்கு மேல் தேவைப்படும் விவசாயிகள் நில அடமானத்தின் பேரில் கிஷான் கடன் பெற்றுக் கொள்ளலாம்.

தேனி மாவட்டத்தில் 1,25,000 விவசாயிகள் உள்ளனர். இதுவரை 20,400 விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 43,785 விவசாயிகள் பி.எம்.கிஷான் ஊக்கத்தொகை பெற்று பயனடைந்துள்ளார்கள். பி.எம்.கிஷான் பெற்ற அனைத்து விவசாயிகளும் உழவர் கடன் அட்டையை வழங்குவதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித் திட்டத்தில் பயன்பெற்ற அனைத்து விவசாயிகளும் இதுவரை எந்த வங்கியிலும் உழவர் கடன் அட்டை பெறவில்லை எனில் அவர்கள் ஏற்கனவே தங்களுடைய பி.எம்.கிஷான் ஊக்கத் தொகை வரவு வைக்கப்பட்ட வங்கி கணக்கு உள்ள கிளை மேலாளர்களை அணுகி, உரிய ஆவணங்களை சமர்ப்பித்து உழவர் கடன் அட்டையினை பெற்றுக்கொள்ளலாம்.

வேளாண்மைத்துறை, வருவாய்த்துறை, ஊரகவளர்ச்சித்துறை, தோட்டக்கலைத்துறை, மகளிர் திட்டம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள், கிராம பஞ்சாயத்து செயலர்கள் தங்கள் பகுதியில் உள்ள பிரதம மந்திரி கிஷான் சம்மான் நிதி திட்டப் பயனாளிகள் அனைவரும் உழவர் கடன் அட்டையை வங்கியிலிருந்து பெறுவதற்கு தேவையான உதவிகளை செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வரும் சனிக்கிழமை 15.02.2020 அன்று உழவர் கடன் அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்க ஏதுவாக அனைத்து வட்டார ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் முகாம் நடைபெறவுள்ளது.

எனவே, மாவட்டத்தில் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி முகாம்களில் கலந்து கொண்டு வங்கிக் கணக்கு புத்தக நகல், நில சிட்டா அடங்கல் மற்றும் ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களை சமர்ப்பித்து உழவர் கடன் அட்டை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**